


தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், ஆகஸ்ட் 25, 2026 | இதழ் 134

# பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும்: முதலமைச்சர் விஜய் அறிவிப்பு

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: புதிய விமான நிலையத்திற்கான இடம் விரைவில் தேர்வு செய்யப்படும் என்று முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார். பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

சட்டசபையில் முதலமைச்சர் விஜய் கூறுகையில், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தால் இயக்கப்படுகிறது. தற்போது இந்த விமான நிலையம் ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாக உள்ளது. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைகளை கருத்தில் கொண்டும் பயணிகளின் வசதிகளை கருத்தில் கொண்டும், சரக்கு போக்குவரத்தை அதிகரித்தும் நோக்கத்திலும் புதிய விமான நிலயத்திற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

சென்னை பரந்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 12 கிராமங்களில் அமைய இருக்கும் விமான நிலையத்தை எதிர்த்து போராடும் மக்களுடன் நான் உறுதியாக நிற்கிறேன். நீண்ட நாட்களுக்கு இந்த திட்டத்திற்கு எதிராக போராடிவரும் விவசாயிகளை எனது ஆதரவை தெரிவித்து கொள்கிறேன். விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு. இந்த விவசாய நிலையங்களை பாதுகாக்க இந்த மக்கள் போராடி வருகிறார்கள்.

ஆனால் பரந்தூரில் இந்த திட்டம் அமையகூடாது. இந்த திட்டம் குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். மக்கள் மற்றும் விவசாயிகள் பாதிக்காத வகையில் இடத்தை தேர்வு செய்ய வேண்டும் என்று அப்போது நான் வலியுறுத்தியிருந்தேன்.

மக்கள் மத்தியிலே நான் அன்றே அறிவித்ததை நிறைவேற்றும் பொருட்டு, புதிய விமான நிலையம் அமைப்பது குறித்து உயர் அதிகாரிகளிடமும் துறை வல்லுனர்களிடமும் விரிவாக ஆலோசனை நடத்தினேன். ஏற்கனவே நான் உறுதி அளித்தவாறு பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த அரசால் கைவிடப்படும்.




துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரிடம் கலந்தாலோசித்து விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாதவாறு புதிய விமான நிலையம் அமைக்க பொருத்தமான சில மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களில் தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறுகளை சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டு புதிய விமான நிலயத் திற்கான இடம் விரை வில் இறுதி செய்யப் படும்.

இதற்கிடையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்து அதன் வட மேற்கு பகுதியில் ஆண்டுக்கு கூடுதலாக 20 மில்லியன் பயணிகளை கையாளக்கூடிய டெர்மினல் 5 என்ற புதிய முனையம் அமைக்க ஏர்போர்ஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியாவுடன் இணைந்து சாலை மற்றும் மேம்பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை ணினம்பாக்கம் விமான நிலையத்தில் தற்போது நடைபெற்று வரும் டெர்மினல் 3 கட்டுமான பணிகள் முடிவுற்ற பின் ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளை கையாள கூடியதாக இருக்கும். மேலும் புதிய டெர்மினல் 5 செயலாக்கத்திற்கு பிறகு ஆண்டுக்கு மொத்தம் 55 மில்லியன் பயணிகளை கையாள கூடியதாக விமான நிலையம் இருக்கும்.

இதன் மூலம் சென்னை விமான நிலையம் மேம்படுத்தப்படுவதோடு புதிய விமான நிலையம் அமைக்கப்படும்வரை பயணிகளின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் தெரிவித்து உள்ளார்.

# ஆண்டுக்கு 3 விலையில்லா சிலிண்டர்கள் வழங்கப்படும்; மகளிர் பயண திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் - முதல்வர் விஜய்

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தில் முதற்கட்டமாக ஆண்டுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் விஜய் அறிவிப்பு வெளியிட்டு உள்ளார்.

எரிவாயு சிலிண்டருக்கான விலை நேரடியாக பயனாளியின் கணக்கில் வரவு வைக்கப்படும். 2027 பொங்கல் பண்டிகையிலிருந்து சிலிண்டர் வழங்கும் திட்டம் செயல்பாட்டுக்கு வரும் எனவும் அறிவித்துள்ளார். 3 இலவச எரிவாயு சிலிண்டர்கள் மூலம் தமிழகத்தில் சுமார் 1.30 கோடி குடும்பங்கள் பயன் பெறும் எனவும் முதல்வர் அறிவித்துள்ளார்.

3 இலவச எரிவாயு சிலிண்டர்கள் மூலம் ஆண்டுக்கு ரூ.4,000 கோடி கூடுதல் செலவாகும் எனவும் தகவல் தெரிவித்துள்ளார். தொடர்ந்து பேசிய முதல்வர் பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என அறிவித்து உள்ளார். மகளிர் கட்டணமில்லா பயணம் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் எனவும் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார். வரும் அக்டோபர் 2




முதல் வெற்றி பயணம் திட்டம் விரிவுப்படுத்தப்படும் எனவும் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் எக்பிரஸ், டீலக்ஸ் பேருந்துகளிலும் மகளிர் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளார்.

## யாருக்கு 3 இலவச சிலிண்டர்?

ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்திற்கு மிகாமல் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பத்தினர், சிறுகுறு விவசாயக் குடும்பத்தினர், மாற்றுத்திறாளி குடும்பத்தினர் மற்றும் சமூகத்தில் உள்ள நலிந்த குடும்பத்தினர் இந்த திட்டம் மூலம் பயனடைவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# போரை முடிவுக்கு கொண்டு வர தடைபட்டு நிற்கின்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிப்பதே நல்ல வழி: ஈரான் அதிபர் கருத்து

சென்னை 25, ஆகஸ்ட் 2026: ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் தொடங்கி 6 மாதமாகிவிட்ட நிலையில், இந்த விவகாரத்தில் இதுவரை தீர்வு எட்டப்படாமல் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு அதை நிறைவேற்றுவதற்கான 60 நாள் காலக்கெடு கடந்த வாரத்துடன் முடிந்துவிட்டது. அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தடைபட்டு நிற்கிறது.

இதற்கிடையே, ஈரான் அதிபர் பெசேஷ்கியனின் உரையை அரசின் ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் அதிபர் பெசேஷ்கியன் கூறியிருப்பதாவது: போரும் இல்லை, அமைதியும் இல்லை என்ற தற்போதைய நிலையில் இருந்து வெளியேற வேண்டுமென்றால், அமெரிக்கா உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிப்பதே சிறந்த வழி. கண்ணியம், விவேகம், தேச நலன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் மிகச் சிறந்ததாக ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தில் சரணடைதலைக் குறிக்கும் ஒரு விதிமுறை கூட இல்லை. எங்கள் உச்ச தலைவர் கொள்கைகளை வகுக்கிறார். நாங்கள் அந்த பாதையை பின்பற்றுகிறோம். இத்தகைய முட்டுக்கட்டை நிலவும் சூழலில் நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்க முடியாது. மூலதனமும் பணமும் அபாயங்களுக்கு வழிவகுக்கக் கூடியவை. நாங்கள் அந்த அபாயத்தை நாட்டிலிருந்து அகற்ற வேண்டும்'' என்றார்.

ஈரான் அதிபர் குறிப்பிடும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஜூன் மாதம் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அமெரிக்கா-ஈரான் இடையே மிகப்பெரிய இடைவெளி இருந்து வருகிறது. இந்த சூழலில், மீண்டும் மத்தியஸ்திற்கான முயற்சியாக பாகிஸ்தான் முப்படை தலைமை தளபதி பீல்ட் மார்ஷல் ஆசீம் முனீர் இன்று ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்கு செல்கிறார்.

வளைகுடா நாடுகளுக்கு கடும் எச்சரிக்கை

ஈரானுக்கு எந்த வகையிலும் உதவும் நாடுகள் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என ஈரான் மீது அதிபர் டிரம்ப் பொருளாதார போரை தொடங்கியிருக்கிறார். இந்த சூழலில் ஈரானின் பாதுகாப்பு தலைவர் மோசென் ரெசாய் நேற்று அளித்த பேட்டியில், "ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதார தடையில் இணையும் எந்த நாடும் எங்களின் எதிரியாக கருதப்படுவர். அவர்கள் மீது தகுந்த பதிலடி தரப்படும்" என அண்டை நாடுகளான வளைகுடா நாடுகளை எச்சரித்துள்ளார். இதற்கிடையே, ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவின் ஒருபகுதியாக சித்திரிக்கும் புகைப்படங்களை மீண்டும் ஒருமுறை அதிபர் டிரம்ப் சமூக ஊடகத்தில் பகிர்ந்து உள்ளார்.

# ஆந்திரப் பிரதேசத்தில் நாட்டின் முதலாவது மரபணு மாற்றப்படாத அதிக விளைச்சல் தரும் பாப்கார்ன் மக்காச்சோள வீரியரக விதையை குடியரசு துணைத்தலைவர் அறிமுகம் செய்துவைத்தார்

சென்னை 25, ஆகஸ்ட் 2026: ஆந்திரப் பிரதேச மாநிலம் எலுரு மாவட்டம் முசுனுருவில் நாட்டின் முதலாவது மரபணு மாற்றப்படாத அதிக விளைச்சல் தரும் பாப்கார்ன் மக்காச்சோள வீரியரக விதையை குடியரசு துணைத்தலைவர் திரு சிபி ராதாகிருஷ்ணன் இன்று அறிமுகம் செய்து வைத்தார். இது வேளாண்மையில் தற்சார்பு இந்தியாவை நோக்கிய ஒரு சிறந்த படியாகும் என்று அவர் விவரித்தார்.

அத்துடன் ஆந்திரப் பிரதேசம் மற்றும் 7 இதர மாநிலங்களைச் சேர்ந்த சிறந்த விவசாயிகளையும் கவுர்மெட் பாப்கார்னிகாவுடன் தொடர்புடைய கூட்டாளர்களையும் அவர் பாராட்டினார்.

அப்போது உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர், விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்றும் வேளாண்மை நாட்டின் நாகரீக, கலாச்சார வாழ்க்கையை வடிவமைத்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்திய வேளாண்மையை வலுப்படுத்துவதில் தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்பு, உள்நாட்டு விதை மேம்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். இந்த விதை அறிமுகம் குறித்து குறிப்பிட்ட திரு சிபி ராதாகிருஷ்ணன், உயர்தர பாப்கார்ன் ஈக்காச்சோளத்திற்காக, இந்தியா பல ஆண்டுகளாக இறக்குமதி செய்யப்பட்ட வீரியரக தொழில்நுட்பத்தையே சார்ந்திருந்ததாக கூறினார். இந்தப் புதிய உள்நாட்டு வீரியரக விதை அதுபோன்ற சார்பு நிலையை தவிர்ப்பதற்கும், அந்நியச் செலாவணியை பாதுகாப்பதற்குமான ஒரு நடவடிக்கையை குறிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். இந்திய மண்ணில் விளைவிக்கப்பட்ட, உலகளாவிய சந்தைகளில் போட்டியிடக் கூடிய திறன்மிக்க இந்தியத் தீர்வை உருவாக்கியதற்காக கவுர்மெட் பாப்கார்னிகா நிறுவனத்தையும், விவசாயிகளையும் அவர் பாராட்டினார்.



## ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் 200 பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தையல் எந்திரங்கள்: சாம்சங் வழங்கியது

ஸ்ரீபெரும்புதூர், 25 ஆகஸ்ட் 2026: சாம்சங் இந்தியா நிறுவனம், தனது ஸ்ரீபெரும்புதூர் ஆலைக்கு அருகில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த 200 பெண்கள் சொந்தமாக தொழில் செய்து முன்னேற உதவியுள்ளது. இரண்டு மாத தையல் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி முடித்த பிறகு, அவர்களுக்கு தையல் சான்றிதழ்களும் தையல் எந்திரங்களும் வழங்கப்பட்டன.

சந்தவல்லூர் மற்றும் சிறுமங்காடு ஆகிய இரு கிராமங்களில் இருந்து தலா 100 பெண்கள், ஸ்ரீபெரும்புதூரில் நடந்த விழாவில் சான்றிதழ்களையும், தையல் எந்திரங்களையும் பெற்றுக் கொண்டனர். இந்த எந்திரங்கள் மூலம், அவர்கள் வீட்டிலிருந்தபடியே தையல் ஆர்டர்களை எடுத்து தைக்கலாம், தங்கள் குடும்ப வருமானத்தை உயர்த்தலாம் அல்லது தங்களது பகுதியில் சிறிய அளவில் தையல் தொழிலை தொடங்கலாம்.

கடந்த மே மாதம் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், துணி தைப்பது மற்றும் அடிப்படை தொழில் திறன்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சாம்சங் நிறுவனம் செய்து வரும் சமூக மேம்பாட்டுப் பணிகளின் ஒரு பகுதியாக, பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சந்தவல்லூரில் பயிற்சி அளித்த தையல் பயிற்சியாளர் கே. குமாரி கூறுகையில், "இந்த பயிற்சியில் சேர்ந்த பல பெண்களுக்கு தையல் பற்றி பெரிய அளவில் எந்த அனுபவமும் இல்லை. ஆனால் இன்று, அவர்கள் தைரியமாக துணிகளைத் தைக்கிறார்கள், வாடிக்கையாளர்களிடம் ஆர்டர்களைப் பெறுகிறார்கள், மேலும் தங்களுக்கு என்று ஒரு நிலையான வருமானத்தை உருவாக்குவது பற்றி சிந்திக்கிறார்கள். அவர்களின் தன்னம்பிக்கை வளர்ந்ததைப் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது" என்று தெரிவித்தார்.



தையல் பயற்சி குறித்தும் தையல் எந்திரம் வழங்கியது குறித்தும் சந்தவல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ஏ. திவ்யா கூறுகையில், "என் குடும்பத்திற்கு உதவக்கூடிய ஒரு திறமையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். இந்தப் பயிற்சி எனக்கு வீட்டிலிருந்தே வேலை செய்யத் தொடங்குவதற்கான தன்னம்பிக்கையைக் கொடுத்துள்ளது. மேலும், இப்போது தையல் எந்திரம் கிடைத்துள்ளதால் என்னால் உடனடியாக வேலையைத் தொடங்க முடியும்," என்றார்.

சிறுமங்காடு கிராமத்தைச் சேர்ந்த ஆர். நந்தினி கூறுகையில், இந்தப் பயிற்சி தனக்கு பொருளாதார ரீதியாக சொந்தக் காலில் நிற்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பைக் கொடுத்துள்ளது என்றார்.

"இந்தப் பயிற்சி எனக்கு தன்னம்பிக்கையை கொடுத்துள்ளது. எனக்குக் கிடைத்த இந்தத் தையல் எந்திரத்தின் மூலம், என் கிராமத்தில் தையல் ஆர்டர்களை எடுத்துத் தைக்கவும், என் குடும்ப வருமானத்திற்கு உதவவும், சுயமாகச் சம்பாதிக்கவும் முடியும் என்று நம்புகிறேன்," என்று அவர் கூறினார்.

சாம்சங் நிறுவனம் 2007-ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தனது உற்பத்திப் பணிகளைச் செய்து வருகிறது. இந்தியாவில் இந்நிறுவனத்தின் உற்பத்தியில் ஸ்ரீபெரும்புதூர் ஆலை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. பல ஆண்டுகளாக, சாம்சங் நிறுவனம் தமிழ்நாட்டில் உற்பத்தியோடு மட்டுமின்றி கல்வி, திறன் மேம்பாடு, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சமூக வளர்ச்சி ஆகியவற்றுக்கான பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

## நிறைவடையாத மழைக்கால கூட்டத்தொடர் தொகுதி மறுவரையறை மசோதா மீண்டும் தாக்கல் செய்ய திட்டமா? ஒன்றிய அரசுக்கு காங்கிரஸ் கேள்வி

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டு 10 நாட்கள் ஆகியும், மழைக்கால கூட்டத்தொடர் இன்னும் அதிகாரப்பூர்வமாக நிறைவு செய்யப்படவில்லை. இதனால் தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்ற ஒன்றிய அரசு விரும்புவதாக ஊகங்கள் எழுந்துள்ளன. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 13ம் தேதி முடிந்து மக்களவை மற்றும் மாநிலங்களவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கமாக அடுத்த 3 அல்லது 4 நாட்களில் கூட்டத்தொடர் அதிகாரப்பூர்வமாக முடித்து வைக்கப்படும். அரசியலமைப்பு விதிகளின் ஜனாதிபதி நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்டவும், முடித்தும் வைப்பார். ஆனால் இம்முறை 10 நாட்களாகியும் நேற்று காலை வரையிலும் கூட்டத்தொடரை அதிகாரப்பூர்வமாக முடித்து வைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

இதனால், 2029 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை செயல்படுத்தும் வகையில், அதை திருத்துவதற்கான தொகுதி மறுவரையறை மசோதாவை அரசு கொண்டு வரக்கூடும் என வலுவான ஊகங்கள் நிலவுகின்றன. இது தொடர்பாக, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பி உள்ளார். அவர், "மக்களவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டு 10 நாட்களாகி விட்டது. ஆனால் இதுவரை அதிகாரப்பூர்வமாக முடித்து வைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

தொகுதி மறுவரையறை தொடர்பான அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதாவை சிறப்பு கூட்டத்தொடரில் நிறைவேற்ற ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா 3ல் 2 பங்கு பெரும்பான்மையை தேடிக்கொண்டிருக்கிறாரா?'' என சந்தேகம் கிளப்பி உள்ளார்.

மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்தால் மக்களவையில் தங்கள் பலம் குறைந்து விடும் என தென் மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகள் எதிர்ப்பதால், அவர்களின் கவலையை போக்க, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் மக்களவை இடங்களின் எண்ணிக்கையை ஒரே சீராக 50 சதவீதம் அதிகரிக்கும் வகையில் ஒரு திட்டத்தை அரசு உருவாக்கி உள்ளது.

கடந்த பட்ஜெட் கூட்டத்தொடருக்கு சிறப்பு கூட்டத்தொடரில் இதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை தாக்கல் செய்ய முயன்ற ஒன்றிய அரசு தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

## சார்மினார் பிர்லாநியூ அல்ட்ரா-பிரீமியம் கூரைகள்: அனைத்துப் பருவங்களிலும் நேர்த்தியாகவும், வலிமையாகவும், கச்சிதமாகவும் திகழும் கூரை

காஞ்சிபுரம், 25 ஆகஸ்ட் 2026: பல தசாப்தங்களாக, ஃபைபர் சிமெண்ட் கூரைத் தயாரிப்புகள் அதன் அடிப்படை அம்சங்களான வலிமை மற்றும் நீடித்த தன்மைக்காக பாரம்பரியமாக மதிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இன்று இந்தப் பிரிவில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. நீண்டகால செயல்திறனுடன் நீடித்த அழகிய தோற்றத்தையும் ஒருங்கிணைக்கும் கூரைத் தீர்வுகளை வாடிக்கையாளர்கள் அதிகளவில் எதிர்பார்க்கின்றனர். இந்தியாவின் குடியிருப்பு மற்றும் வணிகச் சந்தைகளில், குறிப்பாக அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில், வானிலைத் தாக்கங்களை எதிர்க்கும் திறன், மேற்பரப்பு முடித்தலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பைக் குறைத்தல் ஆகியவை முக்கிய வேறுபடுத்தும் அம்சங்களாக மாறியுள்ளன. இந்த அம்சங்கள் இனி விருப்பத் தேர்வுகளாக இல்லை; தயாரிப்பைத் தேர்வு செய்வதிலும் வாங்கும் முடிவுகளிலும் அவை அதிகளவில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த மாறிவரும் எதிர்பார்ப்புகளை கருத்தில் கொண்டு சார்மினார் பிர்லா-னு ஃபைபர் சிமெண்ட் அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸ் உருவாக்கப்பட்டுள்ளன. ஃபைபர் சிமெண்டின் அடிப்படை செயல்திறனை, வானிலைத் தாக்கங்களுக்கு வெளிப்படும் போதும் குறையாத கண்கூடாக மேம்பட்ட மேற்பரப்பு தரத்துடன் ஒருங்கிணைக்கும் கூரைத் தீர்வை வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாடுகளுக்காக இந்த தயாரிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அல்ட்ரா பிரீமியம் வகையின் முக்கிய சிறப்பம்சமாக அதன் நீர்-வெறுப்புத் தன்மை கொண்ட மேற்பரப்பு அமைந்துள்ளது. கனமழையின் போது, வழக்கமான ஃபைபர் சிமெண்ட் கூரைத் தயாரிப்புகள் மேற்பரப்பு மட்டத்தில் ஈரப்பதத்தை உறிஞ்சுகின்றன; இது காலப்போக்கில் நீர் கசிவு, கட்டமைப்பிற்குள் ஈரப்பதம் மற்றும் வானிலைத் தாக்கத்தால் ஏற்படும் சிதைவு போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுத்து, கூரையின் பயனுள்ள




ஆயுட்காலத்தைக் குறைக்கிறது. அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸில் உள்ள நீர்-வெறுப்புத் தன்மை கொண்ட மேற்பரப்பு, இந்த ஈரப்பத உறிஞ்சுதலைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; இதன் மூலம் ஈரப்பதம் கட்டமைப்பு மற்றும் மேற்பரப்பு சேதத்தை ஏற்படுத்தக்கூடிய நுழைவுப் புள்ளிகளைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக ஈரப்பதம் மற்றும் அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் பொதுவாக காணப்படும் மற்றொரு பிரச்சினையையும் ஈரப்பதம் தக்கவைத்தல் ஏற்படுத்துகிறது: கூரையின் மேற்பரப்பில் பாசி உருவாகுதல். அல்ட்ரா பிரீமியம் மேற்பரப்பு சிகிச்சையின் மூலம் ஈரப்பதம் தங்குவது குறைக்கப்படுவதால், பாசி உருவாகி பரவுவதற்கான சூழ்நிலைகள் குறைகின்றன. இதன் மூலம், மீண்டும் மீண்டும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமின்றி, அனைத்து பருவங்களிலும் கூரையின் மேற்பரப்பை மேலும் சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது.

இந்த தயாரிப்பு, வழக்கமான ஃபைபர் சிமெண்ட் விருப்பங்களுடன் ஒப்பிடும் போது மென்மையான மேற்பரப்பு முடித்தலை வழங்குகிறது; இந்த வேறுபாடு கண்கூடாகத் தெளிவாகத் தெரியும்.

மேற்பரப்பு முடித்தல், ஈரப்பத மேலாண்மை மற்றும் ஃபைபர் சிமெண்டின் அடிப்படை செயல்திறன் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு, நீண்ட ஆயுட்காலமும் தோற்றமும் இரண்டும் முக்கியமான தேவைகளாக இருக்கும் திட்டங்களுக்கு அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸை பொருத்தமான தேர்வாக ஆக்குகிறது.

## காவிரியில் நீர் திறந்து விடுவதில் கர்நாடகாவுக்கு என்ன பிரச்னை? உச்ச நீதிமன்றம் கேள்வி

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: தமிழகத்துக்கு நீர் திறப்பதில் கர்நாடகாவுக்கு என்ன பிரச்னை? இது குறித்து மீண்டும் காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழக அரசு முறையிடலாம் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்திற்கு கர்நாடகா தண்ணீர் திறக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கு, இன்று உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சி.எஸ். வைத்யநாதன் வாதிடுகையில், தமிழகத்திற்கு வர வேண்டிய உரிய பங்கு நீர் கிடைக்கவில்லை. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முடிவுணூளின் படி நீர் திறந்துவிடப்பட வேண்டும். நீர் மேலாண்மை ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்துத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்; அணைகளின் நீர்வரத்து சேமிப்பை ஆய்வு செய்து, உரிய காலத்தில் நீரைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உள்ளது என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, கர்நாடகா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஷியாம் திவான் வாதிடுகையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நாளை நடைபெற உள்ளது. எங்களைப் பொறுத்தவரை நீர் பங்கீட்டில் எந்தப் பிரச்னையும் இல்லை என்றார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், கடந்த விசாரணையின் போது திறந்துவிடப்பட்ட நீர் குறித்த விவரம் அடங்கிய வரைபடத்தைக் கர்நாடக அரசு சமர்ப்பித்தது. தற்போதைய சூழல் குறித்துக் காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் இரு தரப்பும் புதிய விவரங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். தமிழகத்துக்கு நீர் திறப்பதில் கர்நாடகாவுக்கு என்ன பிரச்னை? இது குறித்து மீண்டும் காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழக அரசு முறையிடலாம் என நீதிபதிகள் கூறினார். இதையடுத்து, வழக்கு விசாரணையை ஆகஸ்ட் 31ஆம் தேதிக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

**"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"**

## 4 லட்சத்திற்கும் அதிகமான மின்சார வாகன விற்பனையை எட்டிய மஹிந்திரா லாஸ்ட் மைல் மொபிலிட்டி லிமிடெட் ! இந்த மைல்கல் சாதனையை அடைந்த இந்தியாவின் முதல் வர்த்தக வாகன தயாரிப்பு நிறுவனம்!



சென்னை 25, ஆகஸ்ட் 2026: ஒவ்வொரு மூன்று சக்கர வாகனம் மற்றும் சிறிய வர்த்தக வாகனத்திற்கு பின்னாலும் ஒரு வாழ்வாதாரம் உள்ளது - ஒரு ஓட்டுநர், ஒரு கடைக்காரர், ஒரு டெலிவரி பார்ட்னர் அல்லது ஒரு சிறு தொழிலதிபர். இன்று, அத்தகைய 4 லட்சத்திற்கும் அதிகமான மனிதர்களின் பயணங்கள் மஹிந்திரா லாஸ்ட் மைல் மொபிலிட்டா எலக்ட்ரிக் வாகனங்களில் இயங்குகின்றன. மஹிந்திரா லாஸ்ட் மைல் மொபிலிட்டி லிமிடெட், ஒட்டுமொத்தமாக 4 லட்சம் மின்சார வாகனங்கள் விற்பனையை கடந்து, நாட்டின் மின்சார வாகன பயன்பாட்டு மாற்றத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளதுடன், இந்த சாதனையை படைத்த இந்தியாவின் முதல் வர்த்தக மின்சார வாகன தயாரிப்பு நிறுவனம் என்ற பெருமையையும் பெறுகிறது.

இந்த மைல்கல், தங்கள் வருமானம், வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக மஹிந்திரா வணிக மின்சார வாகனங்களை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. எம்.எல்.எம்.எம்.எல் நிறுவனத்தின் இந்த வெற்றிக்கு ஒரு எளிய நம்பிக்கையே காரணம்: பொருளாதார ரீதியாக பயனளிக்கும் போது மட்டுமே வாடிக்கையாளர்கள் மின்சார வாகன பயன்பாட்டிற்கு மாறுவார்கள். வெறும் சுற்றுச்சூழல் தீர்வாக மட்டும் முன்வைக்காமல், வாடிக்கையாளர்களின் தினசரி வருமானத்தையும் தொழில்முறை வளர்ச்சியையும் உயர்த்தும் சிறந்த தயாரிப்புகளை வழங்குவதில் நிறுவனம் கவனம் செலுத்தியது. இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கான நன்மைகளும் இயற்கையாகவே தொடர்ந்து கிடைத்துள்ளன.

மஹிந்திரா மின்சார வாகனங்கள் (யுடிஓ), ட்ரியோ வரம்பு, ஜோர் கிராண்ட், ஜிஇஓ மற்றும் இ-ஆல்ஃபா உட்பட) ஒட்டுமொத்தமாக 900 கோடிக்கும் அதிகமான (9 பில்லியன்) கிலோமீட்டர்கள் பயணிக்கப்பட்டு, தோராயமாக 1,85,000 மெட்ரிக் டன் கார்பன்டை ஆக்சைடு உமிழ்வைத் தடுக்க உதவியுள்ளன - இது 83 லட்சத்திற்கும் அதிகமான மரங்களை நடுவதற்கு சமமாகும்.

வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகள், கூட்டாண்மைகள், நிதி உதவி மற்றும் வாடிக்கையாளர் ஆதரவு ஆகியவற்றிலான முதலீடுகளின் பலத்தால், 2031-ஆம் ஆண்டிற்குள் 10 லட்சம் மின்சார வாகனங்களைச் சாலையில் இயக்க எம்.எல்.எம்.எம்.எல் நிறுவனம் இலக்கு கொண்டு உழைத்து வருகிறது.

மஹிந்திரா லாஸ்ட் மைல் மொபிலிட்டி லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திருமதி சுமன் மிஸ்ரா கூறுகையில், "4 லட்சம் என்பது எங்களுக்கு ஒரு வெறும் எண் அல்ல - அது ஒவ்வொரு நாளும் நாங்கள் மேம்படுத்த உதவிய 4 லட்சம் மனிதர்களின் வாழ்வாதாரம் ஆகும்.

இந்த மைல்கல் சாதனை, மின்சார வாகனங்களைத் தேர்வு செய்த ஓட்டுநர்களுக்கும் தொழில் முனைவோருக்கும், மற்றும் இந்தியாவின் கடைசி மைல் பொருளாதாரத்திற்கு மின்சார வாகனப் பயன்பாட்டை ஒரு நடைமுறைத் தேர்வாக மாற்றிய கூட்டாளர்கள் மற்றும் குழுக்களுக்கு ஐ உரித்தானது.

மஹிந்திராவில், எங்கள் கவனம் தெளிவாக உள்ளது: சிறந்த தயாரிப்புகளை உருவாக்குவது, இந்தச் சூழல் அமைப்பை வலுப்படுத்துவது மற்றும் ஒவ்வொரு கடைசி மைல் வாடிக்கையாளருக்கும் மின்சார வாகனப் பயன்பாட்டை எளிதில் கிடைக்கச் செய்வது தான்."

## தவெக கொடுத்த வாக்குறுதியின்படி ஆண்டுக்கு 6 சிலிண்டர்களை வழங்கும் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திட முன்வர வேண்டும்: டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை, 25 ஆகஸ்ட் 2026: தவெக கொடுத்த வாக்குறுதியின்படி ஆண்டுக்கு 6 சிலிண்டர்களை வழங்கும் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திட முன்வர வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது; "தவெகவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆறு சிலிண்டர்கள் மூன்றாக குறைப்பா? முதலமைச்சர் மூன்று சிலிண்டர்கள் அறிவித்துள்ள நிலையில், மீதமுள்ள மூன்று கேள்விக்குறிதானா?

அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டம் எனும் தலைப்பில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு ஆறு கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி கொடுத்த தவெக, ஆட்சிக்கு வந்தபின்பு முதற்கட்டம் எனக்கூறி லாவகமாக மக்களை ஏமாற்ற முனைந்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கனவே, பயிர்க்கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும் என வாக்குறுதியளித்துவிட்டு, விவசாயிகளின் போராட்டங்களின் வீரியத்திற்கு ஏற்ப படிப்படியாகத் தள்ளுபடித் தொகையை அதிகரித்துக் கொண்டிருக்கும் தவெக அரசு, தற்போது ஆண்டுக்கு ஆறு சிலிண்டர் வழங்கப்படும் என்ற வாக்குறுதியைப் பாதியாகக் குறைத்ததோடு, ஆண்டு வருமானம் 2.5 லட்சத்திற்கு மிகாமல் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என்ற கட்டுப்பாட்டை விதித்திருப்பதும், மீதி எப்போது கிடைக்கும் என்ற தகவலை அறிவிக்காததும் பொதுமக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு, ஆட்சிக்கு வந்த பின்பு எந்தவொரு வாக்குறுதிகளையும் முழுமையாக நிறைவேற்றாமல், அரைகுறையாக நிறைவேற்றுவதைப் பார்க்கும்போது, பிரபல வாழைப்பழ காமெடியைப் போல, மூன்று வந்துவிட்டது, மீதமுள்ள மூன்று எங்கே என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

எனவே, தவெக கொடுத்த வாக்குறுதியின்படி ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்களை கட்டணமில்லாமல் வழங்கும் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திட முன்வர வேண்டும் என முதலமைச்சர் விஜய் அவர்களை வலியுறுத்துகிறேன்" என தெரிவித்து உள்ளார்.

## 'இருமுடி கட்டு' - குடும்பம், நம்பிக்கை, உணர்வுகளை இணைக்கும் சக்திவாய்ந்த படைப்பு



சென்னை, 25 ஆகஸ்ட் 2026: மாஸ் மகாராஜா ரவி தேஜா, இயக்குநர் சிவா நிர்வாணாவுடன் இணைந்து குடும்பம், நம்பிக்கை மற்றும் மனமாற்றத்தை மையமாகக் கொண்ட உணர்வுப்பூர்வமான கதையான 'இருமுடி' திரைப்படத்தில் நடித்துள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் சார்பில் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தயாரிக்க, டி-சீரிஸ் பிலிம்ஸ் வழங்கும் 'இருமுடி கட்டு' திரைப்படம் உலகம் முழுவதும் ஆகஸ்ட் 21 அன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. இதன் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

தயாரிப்பாளர் ரவி சங்கர், "திரில்லர், குடும்ப கதை மற்றும் ஆன்மீகம் என மூன்று விதமான லேயர்களோடு இயக்குநர் சிவா இந்த கதையை எங்களிடம் சொன்னார். எப்படி இது சாத்தியமாகும் என்று னுங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால், அதை சிவா நேர்த்தியாக இந்த படத்தில் செய்து காட்டினார். மாஸ் மகாராஜா ரவி தேஜா, நடிகை பிரியா பவானி சங்கர் என நடிகர்களும், தொழில்நுட்ப குழுவினரும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். தென்னிந்திய ரசிகர்கள் அனைவரும் இந்த கல்ட் கிளாசிக் படத்தை திரையரங்குகளில் ரசிப்பார்கள். சிவா நிர்வாணாவின் இந்த படத்தை அந்த கடவுள் ஐயப்பாவே தேர்வு செய்து உள்ளார். படம் பார்த்துவிட்டு சொல்லுங்கள்".

வசனகர்த்தா விஜய் பாலாஜி, "மைத்ரி மூவி மேக்கர்ஸூடன் ஏற்கனவே இரண்டு படங்கள் பணிபுரிந்திருக்கிறேன். மூன்று தந்தைகளுக்கும் இடையே நடைபெறும் கதை இது. இந்தப் படத்திற்கு பெரும் பலம் இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ் தான். மெட்ராஸ் தினத்தில் சென்னை வந்திருக்கிறார் மாஸ் மகாராஜா. படம் நிச்சயம் அனைவருக்கும் பிடிக்கும்".

பாடலாசிரியர் பாலாஜி வேணுகோபால், " ரவி தேஜா சாரின் படத்திற்கு பாடல் எழுதியிருப்பது நான் கனவிலும் நினைக்காத ஒன்று. தமிழ் படத்தை விட இந்தப் படத்தை நிச்சயம் ரசிகர்கள் கொண்டாடுவார்கள் என்று நம்பிக்கை உள்ளது. பிரியா பவானி சங்கரின் வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. படத்தின் கிளைமாக்ஸில் நெகிழ்ந்துவிட்டேன். இந்தப் படத்தில் நான் எழுதிய மூன்று பாடல்களுமே கதையோடு ஒன்றிய முக்கியமான பாடல்கள். நிச்சயம் படம் அனைவருக்கும் பிடிக்கும்".

ஒளிப்பதிவாளர் விஷ்ணு ஷர்மா, " ரவி தேஜா சாரின் படத்தில் பணிபுரிந்திருப்பது பெருமையான விஷயம். சிவா சார் கதையை சிறப்பாக எடுத்துள்ளார். நிச்சயம் தமிழ் ரசிகர்களுக்கும் இது புதுவிதமான கதையாக இருக்கும்".

குழந்தை நட்சத்திரம் நட்சத்திரா, "இந்த படம் எனக்கு ரொமவே ஸ்பெஷல். என்னை தேர்ந்தெடுத்த இயக்குநர் சிவா சார், மாஸ் மகாராஜா ரவி தேஜா சார், பிரியா பவானி மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி".

நடிகை பிரியா பவானி சங்கர், இந்தப் படத்தில் நானும் ஒரு அங்கம் என்பது பெருமையாக உள்ளது. ரவி தேஜா சாருடன் பணிபுரிந்தது மறக்க முடியாத அனுபவம். வேறு மொழியில் இருந்து வந்த படம் என்று தமிழ் ரசிகர்கள் நிச்சயம் இதை நினைக்க மாட்டார்கள். மொழி என்பது தடையல்ல! அப்பா- மகள் இருக்கும் அனைத்து இடங்களிலும் இந்த படம் வெற்றி பெறும்"

இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ், "ஒரு படத்திற்கு இசையமைக்க அதன் கதை மிகவும் முக்கியம். 'பொல்லாதவன்', 'ராஜா ராணி' படங்களின் கதை கேட்டபொழுது இது நிச்சயம் பிளாக்பஸ்டர் என தோன்றியது. அதுபோலவே 'இருமுடி கட்டு' படத்தின் கதை கேட்டபோதும் நிச்சயம் இது வெற்றி பெறும் என தோன்றியது.

நடிகர் ரவி தேஜா, "இந்தப் படத்தின் தொழில்நுட்பக் குழுவினர் அனைவருக்கும் நன்றி. ஜிவி பிரகாஷ் குமாரின் இசைதான் இந்தப் படத்தின் ஆன்மா. தெலுங்கில் இந்தப் படம் மிகப் பெரிய ஹிட். நட்சத்திராவுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. பிரியாவும் சிறப்பாக நடித்துள்ளார். தயாரிப்பாளர்களின் ஆதரவுக்கு நன்றி.

இயக்குநர் சிவாவை எனக்கு பிடிக்கும். அது ஏன் என்பதை படத்தின் வெற்றி விழாவில் சொல்கிறேன். படம் பார்த்துவிட்டு சொல்லுங்கள்".

## உயர்க்கல்வித்துறை கொள்கை விளக்க குறிப்பு: திமுக ஆட்சிக் காலத்தில் 2025-26ம் கல்வியாண்டில் புதுமைப்பெண் 64,773 மாணவிகள் தமிழ்ப்புதல்வன் 1,25,322 மாணவர்கள் பயன்




சென்னை, 25 ஆகஸ்ட் 2026: புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 2025-26ம் கல்வியாண்டில் 56,971 பொறியியல் கல்லூரி மாணவியர்களும், 7,802 பலவகை தொழில் நுட்பக் கல்லூரி மாணவியர்களும் பயனடைந்துள்ளனர். அதேபோல் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 2025-26ம் கல்வியாண்டில் 67,836 பொறியியல் கல்லூரி மாணவர்களும். 57,486 பலவகை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் பயனடைந்துள்ளனர். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கு கல்வி கட்டண விலக்கு அளித்தல் திட்டத்தின்கீழ் 2025-26ம் கல்வியாண்டில் 51,284 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

திமுக ஆட்சியின் கல்விச் சாதனைக்கு தமிழக அரசு பாராட்டு

திமுக ஆட்சிக் காலத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு தற்போதைய தவெக அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. 2024-25ம் கல்வியாண்டில் சிறப்பாக செயல்பட்ட 114 பள்ளிகளுக்கு சிறந்த பள்ளிகளுக்கான கேடயமும், 2025-26ம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையை அதிகரித்த 179 பள்ளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை மற்றும் கல்வித்தர மேம்பாட்டில் முன்னோடியாக செயல்பட்ட பள்ளிகளை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்தைய திமுக ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட கல்வி சார்ந்த பணிகளின் தொடர்ச்சிக்கு தமிழக அரசு அங்கீகாரம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஜி.வி. பிரகாஷ் குமார் கதாநாயகனாக நடிக்க, சீன் ரோல்டன் இசையமைக்கும் கே.எஸ். சினிஷ் வழங்கும் 'நிஞ்ஜா' திரைப்படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் 24 ஆம் தேதி பூஜையுடன் தொடக்கம்!

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: இயக்குநர் முருகு, ஜி.வி. பிரகாஷ் குமாருடன் இணைந்து முழுமையான ரொமாண்டிக் காமெடி குடும்ப பொழுதுபோக்குப் படத்தை இயக்குகிறார். தஞ்சாவூரில் 20 நாட்கள் நடைபெறும் முதல் கட்ட படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது.

தமிழ் சினிமாவின் பிரபல இசையமைப்பாளர்களான ஜி.வி. பிரகாஷ் குமார் மற்றும் சீன் ரோல்டன் இணையும் 'நிஞ்ஜா' திரைப்படம் புதிய பரிமாணத்தில் உருவாகிறது. இந்த கூட்டணி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

முதலில் இப்படத்தின் இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த ஜி.வி. பிரகாஷ் குமார், தற்போது இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். 'தலைவர் தம்பி தலைமையில்', 'லவ் டுடே', 'பார்க்கிங்' உள்ளிட்ட படங்களில் நடித்துப் பாராட்டைப் பெற்ற பிரார்த்தனா கதாநாயகியாக நடிக்கிறார். முருகு எழுதி இயக்கும் இப்படத்தை சோல்ஜர்ஸ் ஃபேக்டரி மற்றும் லேர்ன் அண்ட் டீச் புரொடக்ஷன் நிறுவனங்களின் சார்பில் எஸ். சாய் தேவானந்த் மற்றும் கே.எஸ். சினிஷ் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

'நிஞ்ஜா' படத்தின் படப்பிடிப்பு இன்று (ஆகஸ்ட் 24) தஞ்சாவூரில், ஸ்ரீபதி சினிமாஸில் பூஜையுடன் தொடங்கப்பட்டது. முதல் கட்ட படப்பிடிப்பு 20 நாட்கள் நடைபெறுகிறது. கேமராவுக்கு முன்னும் பின்னும் பல புதிய திறமையாளர்கள் இந்தத் திரைப்படத்தில் இணைந்துள்ளனர்.

தேசிய விருது பெற்ற 'பார்க்கிங்' திரைப்படத்தை தயாரித்துள்ள கே.எஸ். சினிஷ், தற்போது அர்ஜுன் தாஸ் மற்றும் சாண்டி நடிக்கும் 'சூப்பர் ஹீரோ' என்ற மற்றொரு படத்தையும் ஒரே நேரத்தில் தயாரித்து வருகிறார். மேலும், பா. இரஞ்சித், ஆர்யா கூட்டணியில் உருவாகும் 'வேட்டுவம்' திரைப்படத்தை தயாரிக்கும் நிறுவனம் லேர்ன் அண்ட் டீச் புரொடக்ஷன் என்பது குறிப்பிடத்தக்கது.




இப்படத்தில் ஜென்சன் திவாகர், ராதாரவி, தீபா ராமானுஜம், தேவதர்ஷினி மற்றும் கல்யாணி நடராஜன் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

படத்தின் தொழில்நுட்பக் குழுவில் ஹரிஷ் கண்ணன் ஒளிப்பதிவாளராகவும், கணேஷ் சிவா படத்தொகுப்பாளராகவும், கோபி ஆனந்த் கலை இயக்குநராகவும், பிரியா ரவி ஆடை வடிவமைப்பாளராகவும், தினேஷ் காசி சண்டைக் காட்சிகளின் இயக்குநராகவும் பணியாற்றுகின்றனர்.

ஜி.வி. பிரகாஷ் குமார், சீன் ரோல்டன் மற்றும் அறிமுக இயக்குநர் முருகு ஆகியோரின் புதிய கூட்டணியில் உருவாகும் 'நிஞ்ஜா', தமிழ் சினிமாவின் வரவிருக்கும் படங்களின் பட்டியலில் சுவாரஸ்யமான திரைப்படமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சோல்ஜர்ஸ் ஃபேக்டரி மற்றும் லேர்ன் அண்ட் டீச் புரொடக்ஷன் நிறுவனங்களின் சார்பில் எஸ். சாய் தேவானந்த் மற்றும் கே.எஸ். சினிஷ் இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு தற்போது தஞ்சாவூரில் தொடங்கியுள்ளது. படத்தைப் பற்றிய அடுத்தடுத்த தகவல்கள் விரைவில் வெளியாகும்.

## ஒன்றிய அமைச்சர்கள் பங்களா பழுது பார்க்க ஒரு ஆண்டில் மட்டும் ரூ.92.35 கோடி செலவு: ஆர்டிஐ மூலம் தகவல்

சென்னை, 25 ஆகஸ்ட் 2026: டெல்லி,லுட்டியன்ஸ் பகுதியில் உள்ள ஒன்றிய அமைச்சர்களின் இல்லங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் ஆகியவற்றுக்கான செலவு 2025-26ஆண்டில் ரூ.92.35 கோடியாக அதிகரித்துள்ளது என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிய வந்துள்ளது. பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் எட்வின் லுட்டியன்ஸ் பெயரில் அழைக்கப்படும் டெல்லி லுட்டியன்ஸ் பகுதி மிகவும் விஐபிக்களுக்காக உருவாக்கப்பட்டதாகும்.

டெல்லியின் முக்கிய பகுதியாக இருக்கும் லுட்டியன்ஸ் பகுதியில் செல்வாக்கு மிக்க தொழிலதிபர்கள் எம்பிக்கள், மூத்த நீதிபதிகள், உயர் ராணுவ அதிகாரிகள் வசிக்கின்றனர். லுட்டியன்ஸ் பகுதியில் ஒன்றிய அமைச்சர்களின் பங்களாக்கள் உள்ளன.

இந்த பங்களாக்கள் 100 வருட பழமையானவை. ஒன்றிய அமைச்சர்களின் பங்களாக்களை பராமரிக்க செலவிடும் தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருவது ஆர்டிஐ மூலம் கேட்கப்பட்ட கேள்வி மூலம் தெரிய வந்துள்ளது.




இது தொடர்பாக ஒன்றிய பொது பணித்துறை அளித்த பதிலில், கடந்த 2014ம் ஆண்டில் இருந்து தற்போது வரை ஒன்றிய அமைச்சர்களின் பங்களாக்களுக்கு ரூ.547.68 கோடி செலவிடப்பட்டுள்ளது. அமைச்சர்களின் பங்களாக்களை புதுப்பிப்பது, பழுது பார்த்தல் உள்ளிட்ட பல பணிகளுக்கு 2014-15ம் ஆண்டில் ரூ.27.47 கோடி செலவிடப்பட்ட நிலையில், 2025-26ம் ஆண்டில் இது சாதனை அளவான ரூ.92.35 கோடி என அதிகரித்துள்ளது.

அமைச்சர்களின் பங்களாக்களுக்கான செலவு விவரங்கள் மட்டும் வெளியிடப்பட்டுள்ளன. மக்களவை, மாநிலங்களவை எம்பிக்கள் வீடுகளுக்கான செலவினங்கள் குறித்தோ, அல்லது கேபினட் அமைச்சர்கள் மற்றும் இணை அமைச்சர்களின் அலுவலகங்களுக்கான செலவினங்கள் பற்றிய தரவுகளை அரசு வழங்கவில்லை. அமைச்சரவையில் 70 முதல் 72 கேபினட் அமைச்சர்கள், இணை அமைச்சர்கள் உள்ளனர். இது கடந்த நிதியாண்டில் ரூ.92.35 கோடியாக இருந்த நிலையில், ஒரு பங்களாவின் சராசரி செலவு சுமார் ரூ.1.2 கோடியாக உள்ளது.

## “நடிகர் தனுஷ் எனக்கு இன்ஸ்பிரேஷன்” : நடிகை வர்ஷினி!

சென்னை 25, ஆகஸ்ட் 2026: 'மொத ராத்திரி' திரைப்படத்தில் ரம்யா கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் வர்ஷினி கார்மேகம், கோயம்புத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரியில் இயற்பியல் படித்தவர். குறும்படங்கள் மற்றும் மேடை அனுபவங்கள் மூலம் நடிப்புத்துறையில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது.

அவரது கலைப் பயணத்தில் பரதநாட்டியத்திற்கும் முக்கிய பங்கு உண்டு. உணர்வுகளை வெளிப்படுத்துவது, ஒழுக்கம் மற்றும் உடல் மொழி ஆகியவற்றில் அவருக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்து பரதநாட்டியம். தொடர்ந்து குறும்படங்களில் நடித்து வந்த அவர், கேமரா முன் தனது தன்னம்பிக்கையையும் படிப்படியாக வளர்த்துக் கொண்டார்.

வர்ஷினிக்கு இந்தி சினிமா மீது தனி ஈர்ப்பு உண்டு. கேமராவுக்காக வெறுமனே நடிப்பதைத் தாண்டி, கதாபாத்திரங்களை தங்கள் திறமையான நடிப்பு மூலம் உயிர்ப்பிக்கும் தபு, ரேகா, ஐஸ்வர்யா ராய் மற்றும் ஷோபனா போன்ற நடிகைகள் தனக்கு முன்மாதிரியானவர்கள் என்கிறார். இந்தி மொழியை நன்றாகப் படிக்கவும், சரியாக உச்சரிக்கவும் முடியும் என்று கூறும் அவர், இது ஒரு கலைஞராக தனக்கு இன்னும் அதிக வாய்ப்புகளைத் திறக்கும் என நம்புகிறார்.

“இந்தி தெரிந்திருப்பது ஒரு கலைஞருக்கு இன்னும் பல்வேறு வாய்ப்புகளை கொடுக்கும். குறிப்பாக, ஓடிடி தளங்கள் வளர்ந்து வரும் இந்த காலத்தில் ஒரே மொழிக்குள்ளேயே சுருங்கி விடாமல், பல்வேறு கதாபாத்திரங்களையும் வாய்ப்புகளையும் தேடிச் செல்ல இது உதவுகிறது” என்கிறார் வர்ஷினி.



தற்கால நடிகர்களில் சாய் பல்லவியின் இயல்பான நடிப்பும், நடிகர் தனுஷின் பன்முகத்தன்மை மற்றும் கதாபாத்திரத்திற்காக தன்னை முழுமையாக மாற்றிக் கொள்ளும் திறனும் தனக்கு மிகப் பெரிய இன்ஸ்பிரேஷன் என்கிறார் வர்ஷினி. அதேபோல, யுவன் சங்கர் ராஜா மற்றும் இளையராஜா ஆகிய இருவரின் இசைக்கும் அவர் ரசிகை.

தனது திரைத்துறை பயணத்தில் 'மொத ராத்திரி' திரைப்படம் முக்கியமான மைல்கல் என்கிறார் வர்ஷினி. குறும்படங்களைக் கடந்து, தனது நடிப்பு திறமை, நடன அனுபவம் மற்றும் நடிப்பின் மீதான காதலை பலதரப்பட்ட பார்வையாளர்களிடம் கொண்டு செல்லும் வாய்ப்பாக இப்படத்தை அவர் பார்க்கிறார். கோயம்புத்தூரில் இயற்பியல் படித்ததிலிருந்து, திரையுலகில் காலடி எடுத்து வைக்கும் வர்ஷினியின் பயணம், எதிர்பாராத பாதைகள்கூட சில நேரங்களில் மிகவும் உற்சாகமான இலக்குகளை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் என்பதை நிரூபிக்கிறது.

## “நடிகர் கமல்ஹாசனை போல இருப்பது எனக்கு பலம்”- நடிகர் கார்த்திகேயன்!

சென்னை 25, ஆகஸ்ட் 2026: 'டீகே' எனப் பிரபலமாக அறியப்படும் நடிகர் கார்த்திகேயன் டிகே பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்கி, தற்போது திரையுலகிலும் குறிப்பிடத்தக்க பல கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். 'கனா காணும் காலங்கள்', 'ஹார்ட் பீட்' போன்ற தொடர்களின் மூலமும் ஓடிடி தளங்களிலும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார் கார்த்திகேயன். ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியான 'ஐந்தாம் வேதம்' தொடரில் நடித்து பலதரப்பட்ட பார்வையாளர்களுக்கு மேலும் பரிச்சியமானார்.

கார்த்திகேயனின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகபாவனைகள், ஸ்டைல் மற்றும் வசீகரிக்கும் தோற்றம் ஆகியவை இளம் வயது கமல்ஹாசனை நினைவுபடுத்துவதாக பலரும் கூறுகின்றனர். இதை கார்த்திகேயன் பாராட்டாகவே எடுத்துக்கொள்கிறார். அதிலும், கமல்ஹாசன் தனது விருப்பமான கதாநாயகன் மட்டுமல்லாமல், தனது மிகப் பெரிய இன்ஸ்பிரேஷனும் கூட என்கிறார். கமல்ஹாசனின் படங்களில் 'அன்பே சிவம்' திரைப்படம் கார்த்திகேயனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. வழக்கமான ஹீரோயிசத்தைத் தாண்டி, கதாபாத்திரத்திற்கும் நடிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து கமல்ஹாசன் தேர்ந்தெடுத்த கதாபாத்திரங்கள் தனக்கு மிகவும் பிடிக்கும் என்கிறார்.

இசையின் மீதும் கார்த்திகேயனுக்கு ஆழமான காதல் உண்டு. குறிப்பாக, இசைஞானி இளையராஜாவின் இசை, அவரது தனிப்பட்ட வாழ்க்கையிலும் கலைப் பயணத்திலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. தனக்கென வாய்ப்புகள் அதிகம் வந்தபோதிலும் தனது கதாபாத்திரங்களை தேர்ந்தெடுப்பதில் நிதானத்தை கடைபிடிக்கிறார் கார்த்திகேயன்.



“நான் பெரிய நட்சத்திரமாக வேண்டும் என்று ஒருபோதும் அவசரப்படுவதில்லை. சரியான நேரத்திற்காகக் காத்திருந்து, சரியான வாய்ப்புகளைத் தேர்வு செய்து, உண்மையிலேயே எனக்கு சவாலாக இருக்கும் கதாபாத்திரத்திற்காக காத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். வெறும் கவனத்தைப் பெறுவதற்காக அவசரப்படுவதைவிட, படிப்படியாக வளர்வதையே விரும்புகிறேன்” என்கிறார் அவர்.

வெறுமனே திரையில் வந்துபோகும் கதாபாத்திரங்களில் மட்டுமே நடிக்காமல், ஒரு நடிகராக தன்னுள் இருக்கும் வெவ்வேறு பரிமாணங்களை வெளிக்கொண்டு வரக்கூடிய சவாலான கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுக்க அவர் விரும்புகிறார்.

வசீகரிக்கும் தோற்றம் மற்றும் தொலைக்காட்சி, ஓடிடி என பல்வேறு தளங்களில் கிடைத்து வரும் அனுபவம் ஆகியவற்றுடன், கார்த்திகேயன் தனது நடிப்பு பயணத்தின் அடுத்த கட்டத்திற்கு தயாராகி வருகிறார்.

பட்டுக்கோட்டையிலிருந்து தமிழ் திரையுலகில் நுழைந்திருக்கும் கார்த்திகேயன் தனது திறமையை வெளிப்படுத்தும் கதாபாத்திரங்களுக்காக காத்திருக்கிறார். அவரது காத்திருப்பு நிச்சயம் அர்த்தமுள்ளது எனவும் நம்புகிறார்.